# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

14.11.2020 சனிக்கிழமை


## புதினம் தெரியுமோ?

ஒரு விசயத்தை செய்ய வேண்டிய நேரத்தில செய்யாம, பிறகு செய்யிறதால பெரிசா பிரியோசனம் கிடைக்காது பாருங்கோ. இத ஏன் இப்ப சொல்லிறன் எண்டா, கூட்டமைப்புப் பெரியவர் பற்றி இப்ப காதில விழுற கதையளக் கேட்டுத்தான் சொன்னன் கண்டியளே.

சட்டம்பி எம்.பி. ஒருத்தர் தனிக்காட்டு ராஜாவா சுத்தேக்க அவர குட்டித் தட்டி வைக்காம விட்டிட்டு, இப்ப பெரியவர் 2

# நல்லூரில் ஒருவருக்கு தொற்று

**யாழ்ப்பாணம், நவம்பர் 14**

**நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் கொரொனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார்.** 2

## மருத்துவ பீடத் தெரிவில் யாழ்.மாவட்டம் முதலிடம்

*யாழ்ப்பாணம், நவ.14*

2019ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் மருத்துவ பீட மாணவர் தெரிவில் யாழ். மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுள் திறமைச் சித்தி பெற்ற மாணவர் 2

## சடலத்துடன் வந்தோர் தனிமைப்படுத்தலில்

*கொழும்பு, நவ.14*

கொழும்பில் உயிரிழந்தவரின் சடலத்தை காரைநகருக்கு எடுத்து வந்த ஐவர் குடும்பங்களுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த நபர் கொழும்பு 13 வசித்துவந்த நிலையில் மாரடைப்புக் காரணமாக உயிரிழந் 2



## சுகாதார நடைமுறைகள்: மீறிய 201 பேர் தடுப்பில்!

*கொழும்பு, நவ.14*

முகக்கவசம் அணியாமை மற்றும் தனிநபர் இடைவெளி பேணாமை தொடர்பில் இதுவரையில் 201 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் ஆள்நடமாட்டம் தொடர்பில், கண்காணிப்பதற்காக விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ட்ரோன் கமராக்களின் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை 15 பேரும் ,நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 7 பேரும் கைது செய்யப்பட் 2

# சுழிபுரம் இரட்டைக் கொலை இதுவரை 4 பேர் கைதாகினர்

### 15க்கும் மேற்பட்டோரை தேடி பொலிஸார் வலை வீச்சு

*யாழ்ப்பாணம், நவ.14*

சுழிபுரம், மத்தி குடாக்கனையில் நேற்று இரவு நடந்த இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் 4 பேர் இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இன்னும் 15 பேர் வரையில் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேநபர்களைக் கைது செய்வதற்காக யாழ்ப்பாணம், மானிப்பாய், தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை 2



## நெல்லியடியில் பலூன் விற்றவர்களுக்கு தடை

*யாழ்ப்பாணம், நவ.14*

வடமராட்சி நெல்லியடியில் காற்று நிரப்பப்பட்ட பலூன்கள் மற்றும் பொம்மைகள் விற்பனை செய்த தென்னிலைங்கையைச் சேர்ந்த நடைபாதை வியாபாரிகள் அங்கிருந்து அனுப்பப்பட்டனர்.

பலூன் வியாபாரத்தில் கூடிய மக்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் எச்சரிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவலையடுத்து 2

## வாள்வெட்டில் பெண் காயம்

*கிளிநொச்சி, நவ.14*

விசுவமடுவில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்தவர் தருமபுரம் வைத்தியசாலையில் 2

## கரந்தெனிய, காலி தனிமைப்படுத்தல்

*கொழும்பு, நவ.14*

கரந்தெனிய மற்றும் காலி ஆகிய இடங்கள் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

7 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே இந்த 2

## கிணற்றில் வீழ்ந்து ஒருவர் சாவு

*கொழும்பு, நவ.14*

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியங்கூடல் தெற்கில் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நவரத்தினம் ஜெயசீலன் (வயது54) என்பவரே உயிரிழந்துள் 2

## சடலத்துடன் வந்தோர்...

துள்ளார். அவரின் சடலத்தை அவரது குடும்பத்தினர் ஐவர், காரைநகரில் இறுதி சடங்கு செய்து உடலைத் தகனம் செய்யும் நோக்குடன் நேற்றுக் கொழும்பில் இருந்து காரைநகருக்கு எடுத்து வந்திருந்தனர்.

அவர்கள் தனிமைப்படுத்த விதிமுறைகளை மீறினார்கள் என சடலத்தை எடுத்து வந்தவர்களை காரைநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் தனிமைப்படுத்தியுள்ளார்.

அதேவேளை இறந்தவரின் உடல் கோம்பயன்மணல் மயானத்தில் உள்ள மின்சார மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (எ-26)

## நல்லூரில்...

தொற்றுடன் இனங்காணப்பட்டவர் பேலியகொட கொரொனா கொத்தணியுடன் தொடர்புடையவர் என்றும், இவர் சாரதியாகப் பணியாற்றுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் இன்று வெளியாகியுள்ள நிலையில், அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## மருத்துவ பீடத்....

எண்ணிக்கையிலும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஆயிரம் பேருக்கு எத்தனை பேர் மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். எண்ணிக்கை அடிப்படையிலுமே அகில இலங்கை ரீதியில் யாழ். மாவட்ட மாணவர்கள் முதன்மை பெற்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் திறமைச் சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கையில் யாழ் மாவட்டத்தில் 66 சதவீத மாணவர்கள் தெரிவு பெற்றுள்ளனர். இரண்டாம் இடத்தில் உள்ள கொழும்பு மாவட்டத்தில் 62 வீத மாணவர்களே திறமைச் சித்தி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(எ)

## சுழிபுரம்....

ஆகிய பொலிஸ் பிரிவுகளில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

குடும்பங்களுக்கு இடையே நீண்ட காலமாக நீடித்த பகை நேற்று வாள்வெட்டு மோதலாக மாறி இரட்டைக் கொலையில் முடிந்தது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் செல்வம் (வயது 56) மற்றும் இராசன் தேவராசா (வயது31) என்பவர்களே உயிரிழந்தனர்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் உறவினர்களுக்கு இடையே மோதல் உருவாகும் பதற்ற நிலை ஏற்பட்டது.

அதனால் பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் சம்பவ இடத்தில் பாது காப்புக் கடமையில் ஈடுப டுத்தப்பட்டுள்ளனர்.(எ-26)



## சுகாதார நடைமுறைகள்...

டுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் இதுவரையில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த பகுதிகளில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் வைத்திய சிகிச்சைகளுக்காக மாத்திரமே பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூக இடைவெளி பேணாமை மற்றும் முகக்கவசம் அணியாமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை மாத்திரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது நீர்கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் சீதுவ ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய இதுவரையில் இந்த சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 201 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## கரந்தெனிய,....

அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதையடுத்துக் கரந்தெனிய பகுதியில் வசிப்பவர்களுக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர் சோதனை முடிவுகள் கிடைக்கும்வரை சில பகுதிகளை தற்காலிகமாக தனிமைப்படுத்த முடிவு செய்யப்பட்டது என்றும் ஆளுநர் வில்லி கமகே குறிப்பிட்டுள்ளார். (எ)

## கிணற்றில்...

ளார். இந்தச் சம்பவம் இன்று காலை நடந்துள்ளது.

உயிரிழந்தவரின் உடல் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-25)

## வாள்வெட்டில்...

சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தேநீர் கடை ஒன்றில் ஒருவர் உணவருந்திக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஒருவர் வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ113)

## புதினம் தெரியுமோ

தனிச்சுப் போய் இருக்கிறாராம் பாருங்கோ.

எல்லாத்துக்கும் சட்டம்பி எம்.பியார நம்பிக் கொண்டிருந்த பெரியவர், இப்ப சட்டம்பி எம்.பியார் ஒதுக்கிக்கொள்ள கையறு நிலைமையில இருக்கிறாராம். சட்டம்பி எம்.பிக்குச் செல்லம் குடுக்குகிறார் எண்டு பெரியவர் மீது ஏற்கனவே கட்சியாக்கள் கடுப்பில இருக்கிறதால அவையளும் இப்ப பெரியவரைக் கணக்கெடுக்கிறதில்லையாம்.

தன்னட்ட இருக்கிற பதவியளைப் பிடுங்கிறதுக்கு பெரியவரும் ஓம்மெண்டு சொன்னது சட்டம்பி எம்.பிக்கு சரியான கோவம். அதனால் அவரும் செய்யிறன் வேலை எண்டு பெரியவரின்ட அலுவல் ஒண்டும் இப்ப பாக்கிறேல எண்டு கேள்வி. பாவம் அந்த மனிசன் வயது போன நேரத்தில தனிய இருந்து யோசிச்சுக் கொண்டு இருக்குது எண்டு கட்சி ஆக்கள் கதைக்கினம்.

இதுக்குத்தான் சொல்லுற ஆரம்பத்தில எல்லோரும் சொல்லேக்க ஆராய்ந்து பார்த்து நடந்திருக்கோணும். அதவிட்டு விட்டு, கண்ண மூடிக்கொண்டு இருந்து தலையாட்டிக் கொண்டு இருந்துபோட்டு, இப்ப குத்தி முறிஞ்சு பிரியோசனம் இல்லைத்தானே.

-பட்சி

# தீர்வுக்காகச் செயற்பட விரைவில் தேசிய சபை

### மாவை தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றுபட்டு உழைப்பதற்காகவும், துறைசார் ஆலோசனைகள், நிபுணத்துவ உதவிகளை வினைத்திறன் மிக்கதாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் தேசிய சபை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக இப்போது தமிழ்த் தேசியம் சார்ந்து செயற்படும் கட்சிகளை ஒன்றிணைத்துப் பயணிக்க ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பில் நான் விடுத்த கோரிக்கைக்கு அனைத்து தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சித் தலைவர்களும் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கியிருக்கின்றார்கள். காலத்தின் தேவை அறிந்து ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த கூட்டு முயற்சி எதிர்காலத்தில் மேலும் பலப்படுத்தப்படவுள்ளது.

அதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் இப்போது தொடங்கியிருக்கின்றன. விரைவில் தேசிய சபை ஒன்று உருவாக்கப்படும். இந்த முயற்சி மாவை சேனாதிராஜாவால் முன்னெடுக்கப்படும் தேர்தலை இலக்காகக் கொண்ட நடவடிக்கை அல்ல. இது இன்றைய காலத்தின் கட்டாய தேவை-என்றார். (எ-22)

## நெல்லியடியில்...

தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் நடைபாதை வியாபாரங்களுக்கும் மக்கள் ஒன்று கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதை மீறியதால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இன்று சனிக்கிழமை நண்பகல் நெல்லியடியில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் வாயு சிலிண்டர் பயன்படுத்தி பலூன்கள் மற்றும் காற்றடைக்கப்பட்ட பொம்மைகள் விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். அதையறிந்த கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இந்த நடவடிக்கையை எடுத்தார்.(எ-இ)

# 3 வாரங்களில் 40 பேர் சாவு!

**12,690 பேருக்கு கொரோனா**
**30 ஆயிரம் பேர் சுயதனிமையில்**

கொழும்பு, நவ.14

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் கடந்த 22 நாள்களில் மட்டும் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்ரோபர் 22 வரையான சுமார் 8 மாத காலப் பகுதியில் கொரோனாவால் 13 பேரே உயிரிழந்திருந்தனர். 31 ஆம் திகதியாகும்போது உயிரிழப்பு 20 ஆக அதிகரித்தது.

கடந்துள்ள 14 நாள்களில் மாத்திரம் 33 பேர் உயிரிழந்துள்ளனர். நாளாந்தம் கொரோனா உயிரிழப்புக்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. உயிரிழந்தவர்களில் 90 வீதமானோர் 60 வயதைக் கடந்தவர்கள்.

அதேவேளை, இலங்கையில் கொரோனா 3ஆவது அலை மூலம் (மினுவாங்கொட, பேலியகொட கொத்தணிகள்) நேற்றுவரை 12 ஆயிரத்து 690 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. அதில் 3 ஆயிரத்து 106 என்ற எண்ணிக்கையுடன் மினுவாங்கொட கொத்தணி பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், பேலியகொட கொத்தணி பரவல் 9 ஆயிரத்து 580 ஐ தாண்டியுள்ளது.

அதேவேளை ,இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று நள்ளிரவுவரை 16 ஆயிரத்து 190 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது. இவர்களில் 11 ஆயிரத்து 30 பேர் நேற்றுவரை குணம டைந்துள்ளனர். 53 பேர் உயிரிழந்துள்ளனர். அதே வேளை, கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்த முதல் மற்றும் 2ஆம் நிலை தொடர்பாளர்கள் 30 ஆயிரம் பேர் தற்போது சுயதனிமையில் ஈடுபட்டுவருகின்றனர். (எ-44)



# இதுவரை 6½ லட்சம் பி.சி.ஆர்.

கொழும்பு, நவ.14

இலங்கையில் இதுவரை 6 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

நாட்டில் அதிகளவில் அதாவது நேற்று மட்டும் 13 ஆயிரத்து 671 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 50 ஆயிரத்து 257 ஆக உள்ளது. (எ-இ)

# சுகாதார பாதுகாப்புகளில் பொதுமக்கள் கவனயீனம்

*மருத்துவர் ஜயருவான் தெரிவிப்பு*

கொழும்பு, நவ.14

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காணப்படும் நிலையில், பொதுமக்கள் தொடர்ந்தும் கவனயீனமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

எழுமாறாக மேற்கொள்ளப்படும் பி.சி. ஆர். பரிசோதனைகளில் கொழும்பு நகரில் 5 வீதமான கொவிட் 19 தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

ஆனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் கவனயீனமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.(எ-இ)



# கருவாடு உற்பத்தி மழையால் பாதிப்பு!

*மீனவர்கள் கவலை*

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணத்தில் கருவாடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடலுணவுகளின் விலை மற்றும் ஏற்றுமதி வீழ்ச்சியை அடுத்து அதிகளவான மீனவர்கள் கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், தற்போது பெய்துவரும் மழை காரணமாக இந்தக் கருவாடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மற்றும் குருநகர் பிரதேசத்தில் கருவாடு உற்பத்தி அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. பாரை, ஒட்டி, கும்பிளா, சூரை, இறால், கணவாய் போன்ற கடலுணவுகள் அதிகளவில் கருவாட்டுக்கு பயன்படுத்தப்படுகின்றன.(ற-ரி4)

# கட்சி தாவியவர்களுக்கும் எதிர்க்கட்சிக் கதிரை!

கொழும்பு, நவ.14

20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சி வரிசையில் பிரத்தியேக ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளும் கட்சி வரிசையில் ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ள போதுமான இடமில்லாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20ஆம் திருத்தச் சட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். அதையடுத்து ஒன்று கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழு, அவர்களை ஆளும் கட்சி தரப்பினராகக் கருதத் தீர்மானித்திருந்தது.

நாடாளுமன்றத்தில் அவர்களுக்கான ஆசனங்களை ஆளும் கட்சி வரிசையில் ஒதுக்க வேண்டும் என்று அந்தக் கட்சி சபாநாயகரிடம் எழுத்து மூலம் கோரியிருந்தது. ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் உள்ளன. 30க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர். கட்டளை சட்டத்தின்படி நாடாளுமன்றில் ஆசனங்களை ஒதுக்குவது தொடர்பான முழுமையான அதிகாரம் சபாநாயகரிடமே உள்ளது. சபாநாயகரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் நாடாளுமன்ற பொதுச் செயலாளரால் படைக்கள சேவிதருக்கு அறிவிக்கப்படும். அதன்பின்னரே ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

இந்த 8 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் தொடர்பில் கொழும்பு செய்திச் சேவை ஒன்று படைக்கள சேவிதரிடம் வினவியபோது, எதிக்கட்சி வரிசையில் சிரேஸ்டத்துவ அடிப்படையில் ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளன. அது தொடர்பில் அடுத்த வாரம் பெரும்பாலும் தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்தார் எனக் குறிப்பி டப்பட்டுள்ளது. (எ-இ)

# சுன்னாகத்தில் சைக்கிள் திருட்டு

அளவெட்டி, நவ.14

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்று நேற்றுத் திருடப்பட்டுள்ளது.

சுன்னாகத்திலுள்ள கடைத் தொகுதி ஒன்றில் நபர் ஒருவர் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு பொருள்கள் வாங்கச் சென்றபோதே துவிச்சக்கர வண்டி திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-63)





ஐப்பசிக் கடைசி வெள்ளியை முன்னிட்டு, நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி திருக்கோயிலில் நேற்று கால(இயம) சம்ஹார உற்சவம் இடம்பெற்றது. தற்போதைய நிலமையைக் கருத்தில் கொண்டு இந்த உற்சவத்தில் ஆலய பரிபாலகர், அர்ச்சகர்கள், உபயகாரர்கள் ஆகியோர் மட்டுமே பங்கேற்றனர். (ற-இ)






# விழிப்புணர்வு நாடகம்!

மன்னார், நவ.14

கொரோனா விழிப்புணர்வு குறியீட்டு வீதி நாடகம் மன்னாரிலுள்ள பொது இடங்களில் நேற்று இடம் பெற்றது. மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில், பேசாலை முவிராசக்கள் பட்டினம் கலைப்பட்டறைக் கலைஞர்களால் இந்த நிகழ்வு மன்னார் பஸ் நிலையம், மருத்துவமனை போன்ற பொது இடங்களில் ஒழுங்கமைக்கப்பட்டது.

இதன்போது முகக்கவசங்கள், கொரோனா தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் என்பன பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன், பஸ்கள் மற்றும் கடைகள் போன்ற பொது இடங்களில் விழிப்புணர்வுச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. (ற-56)

# பெரும்போகத்துக்கான நீர் வழங்கல் ஆரம்பம்!

வவுனியா, நவ.14



பெரும்போக பயிர்ச் செய்கைக்காக வவுனியா பாவற்குளத்திலிருந்து நீர் விநியோகம் மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் குமாரசாமி இமாசலன் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா பாவற்குளத்தின் 12 கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 134 ஏக்கர் பெரும்போக பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோகமே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாக ஆயிரத்து 700 விவசாய குடும்பங்கள் பயனடையும் என பிரதேச நீர்ப்பாசன பொறியியலளர் கு.இமாசலன் தெரிவித்தார். இந்த நிகழ்வில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரிவு உதவியாளர் கெ.கஜமுகதாஸ், நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (வ-இ)



## பாதுகாப்பு செயலாளருடன் ஷ்கோடா நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, நவ.14

இலங்கையில் உள்ள ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பாளர் கோர்ணல் ஷ்கோடா, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் சந்தித்தார்.

இவர்களுக்கிடையில் இடம்பெற்ற நல்லுறவுக் கலந்துரையாடலின் போது, இருதரப்பு முக்கியத்துவம் குறித்த விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின் நினைவுப் பரிசை பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு இணைப்பாளருக்கு வழங்கினார். (ற-ரி4)

## பெரும்போக செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

கொழும்பு, நவ.14

நாடு முழுவதிலும் 8 இலட்சத்து 17 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என விவசாயப் பணிப்பாளர் நாயகம் டபிள்யு. எம். டபிள்யு. வீரகோன் தெரிவித்துள்ளார்.

சிறுபோகத்தில் சிறந்த அறுவடை கிடைத்ததால் விவசாயிகள் பெரும்போகச் செய்கையில் ஆர்வம் காட்டுவதாகவும், நெற்செய்கைக்குத் தேவையான உரத்தை விநியொகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-ரி4)

## கொடிகாமம் நகர் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு!

கொடிகாமம், நவ.14

கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபையினரால் கொடிகாமம் நகர் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு பஸ்தரிப்பு நிலைய பயணிகள் சாரதிகள் நடத்துநர்கள் சந்தை உட்புற வியாபாரிகள் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கப்பட்டன. இதன்போது, கரவெட்டி பிரதேச சபையினரால் முன்னெடுக்கப்படவுள்ள உக்கக்கூடிய திண்மக் கழிவகற்றல் தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கிவைக்கப்பட்டன. மேலும் பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-159,131)



## பாதுகாப்பு செயலர்– ஈரான் தூதுவர் சந்திப்பு



கொழும்பு, நவ.14

இலங்கையில் உள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் எச்.இ.அஷ்ஜசாதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர். ஜெனரல் கமல் குணரத்னவை நேற்றுச் சந்தித்தார்.

இதன் போது, இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பர பொருத்தப்பாடு தொடர்பான விடயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன. இந்த விஜயம் இலங்கை மற்றும் ஈரான் இடையே நீண்டகால உறவை மேலும் பலப்படுத்தும் என ஈரான் தூதுவர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். (வ-ரி4)

# மட்டு. அபிவிருத்திக் குழுவில் 4,127 திட்டங்கள் ஆராய்வு!

மட்டக்களப்பு, நவ.14

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்டச் செயலர் கே.கருணாகரனின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி உள்நாட்டு கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வனிகசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதில், நிதி அமைச்சால் சுமார் 891 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட 4ஆயிரத்து 127 திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்தத் திட்டங்களில் 1898 திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன எனவும் அவற்றுக்கு 298 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது எனவும் மாவட்ட திட்டமிடல் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மாவட்டத்தில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளான சட்டவிரோத மண் அகழ்வு, மயிலத்தன்னைமடு மாதவனைப் பிரதேச அத்துமீறிய குடியேற்றம் போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டன. மேலும் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. (வ-46)

# வீடு கையளிப்பு

மன்னார், நவ.14

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முசலி கிராமத்தில் வீடின்றி உள்ள குடும்பம் ஒன்றுக்கு எல்.யு.டி.எப் பவுன்டேசனின் ஊடாக அதன் தலைவர் மருத்துவர் ஹரிஸ்தீனால் வீடொன்று அமைத்துக்கொடுக்கப் பட்டுள்ளது.

வீட்டின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் வை.எம்.எம்.ஏ. மன்னார் மாவட்ட பணிப்பாளர் முஹமட் சுபீர் வீட்டை நேற்று முன்தினம் அந்தக் குடும்பத்திடம் கையளித்தார். (வ-56)



# வவுணதீவில் மரநடுகை

மட்டக்களப்பு, நவ.14

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் மரநடுகை நிகழ்வு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட 4 ஆவது கெமுனு படைப்பிரிவின் இராணுவக் கட்டளைத் தளபதி ஜயந்த ஜயசிங்கே தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் முதற்கட்டமாக உன்னிச்சை காந்திநகர் கிராமசேவகர் பிரிவில், சுமார் இரண்டு ஏக்கர் காணியில் மரநடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் “சேர்ந்து காப்போம் கிழக்கு” எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாணத்தில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இந்த மரநடுகைத் திட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

காடுகள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் காடுகளை மீண்டும் உருவாக்கி நாட்டு மக்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் சிறந்த ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் நோக்குடன் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவ கட்டளைத் தளபதி ஜயசிங்கே மேலும் தெரிவித்தார். (ற-46)





# பிரபல ஊடகவியலாளர் 61 வயதில் மறைவு



கொழும்பு, நவ.14

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சிங்கள சினிமாத்துறையின் மூத்த பாடலாசிரியரும், கலைஞருமான சிட்னி சந்திரசேகர 61ஆவது வயதில் இன்று காலமானார். உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலலேயே அவர் உயிரிழந்துள்ளார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)

# நாளைமறுதினம் முதல் மீளவும் ரயில்சேவைகள்

கொழும்பு, நவ.14

நாட்டில் அலுவலக ரயில்கள் மற்றும் பிராந்திய ரயில்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் வழக்கமான கால அட்டவணைகளின் படி இயங்கவுள்ளன என்று இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தை விட்டு பொதுமக்கள் வெளியேறுவதைத் தடுக்கும் முகமாக இன்றும் நாளையும் திட்டமிடப்பட்டபடி அனைத்துப் பயணிகள் ரயில்களும் இரத்து செய்யப்பட்டன. இந்த நிலையில் நாளை மறுதினம் முதல் மீளவும் இந்த ரயில் சேவைகள் இயங்கவுள்ளன. (ற-இ)

# வரிக்கொள்கைப் பிரதிபலிப்பே நாட்டின் பொருளாதார வீழ்ச்சி!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

அரசின் வரிக் கொள்கையே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக தெரிவித்து வந்த அரசால், நாட்டிலிருந்த பொருளாதாரத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் அனைத்து வருமான வழிகளும் வீழ்ச்சியடைந்துள்ளது.



ஆனால் அரசு கொரோனாவைக் காரணம் காட்டி பொருளாதார வீழ்ச்சியை மறைக்க முயற்சிக்கின்றது. கொரோனா நாட்டுக்குள் வருவதற்கு முன்னரே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்து விட்டது. அரசின் வரி கொள்கையின் பிரதிபலிப்பே இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகும் - என்றார். (ற-இ)

# 72 இலங்கையர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, நவ.14

கொரோனா அச்சுறுத்தலால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 72 இலங்கையர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இன்று காலை வந்தடைந்துள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் மத்திய கிழக்கு மற்றும் இந்தியாவில் இருந்து இவர்கள் வருகை தந்துள்ளனர். அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்திய தன் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (வ-இ)

# சாதாரண தரப் பாட விதானம் முழுமை தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, நவ.14

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக் கான பாடவிதானங்கள் முழுமைப்படுத்தப்பட்டுள் ளனவா என்பது தொடர்பில் ஆய்வு செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்களிட மிருந்து இணையத்தளம் ஊடாகவும் வலயக் கல்வி அதிகாரிகளிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள் ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலா ளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இந்தத் தகவல்களை அடிப்ப டையாகக் கொண்டு, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்தும் இறுதித் திகதி தீர்மா னிக்கப்ப டும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

தற்போதுவரையில் ஏற்க னவே அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளிலேயே பரீட்சையை நடத்த திட்டமிட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள் ளார். அதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெ றும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. (எ-இ)

# வாடிக்கையாளர் மீது கத்திக்குத்து

## கோப்பாயில் இறைச்சிக்கடை உரிமையாளர் கைது

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம், கோப்பாய் சந்தி யில் நடந்த கத்திக்குத்து சம்பவத் தில் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக இறைச்சிக் கடை உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள் ளார். இந்தச் சம்பவம் இன்று காலை 9.30 மணியளவில் கோப் பாய் சந்திக்கு அண்மையிலுள்ள இறைச்சிக் கடை ஒன்றில் நடந் துள்ளது.

வாடிக்கையாளருடன் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை அடுத்து இறைச் சிக் கடை உரிமையாளர் இறைச்சி வெட்ட பயன்படுத்திய கத்தியால் வாடிக்கையாளரைக் குத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் கோப்பாய் வைத்தியாசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார். இறைச்சிக்கடை உரிமை யாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-26,25)

# வாகன விபத்தில் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு, நவ.14

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பிளாந் துறை பகுதியில் இன்று இடம் பெற்ற வாகன விபத்தில் குடும் பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வெலிக் கந்தையில் இருக்கும் வயலுக்கு சென்றுகொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்சாரத் தூணில் மோதியதில் படுகாயம டைந்த அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளை களின் தந்தையான சு.பரணிதரன் (வயது37) என்பவர் எனத் தெரிய வருகிறது. (வ-இ)

# '20' ஐ ஆதரித்த டயானவை கைகழுவியது சஜித் அணி!

கொழும்பு, நவ.14

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த டயான கமகேவை கட்சியில் இருந்து நீக்குவது என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்துள்ளது.

சஜித் பிரேமதாசவால் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு கட்சியின் நாடாளுமன்றக்குழுவும் அனுமதி வழங்கி யுள்ளது.

20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்க ளித்த டயானாவை நாடாளுமன்றக்குழுவில் இருந்து நீக்குவதற்கு ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி நடவ டிக்கை எடுத்திருந்தது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக கட்சி உறுப்புரிமை யில் இருந்து அவர் நீக்கப்படவுள்ளார். அதற்கான சட்டபூர்வமான அறிவித்தல் விரைவில் விடுக்கப்பட வுள்ளது.

அதேவேளை, 20க்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தோழமைக்கட்சிகளின் உறுப்பினர் களுக்கு எதிராக அந்தந்தக்கட்சிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. (எ-44)

# 293 பேர் மீண்டனர்

கொழும்பு, நவ.14

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 293 பேர் குணம டைந்துள் ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயி யல் பிரிவு அறிவித்துள் ளது.

நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 324 ஆக அதிக ரித்துள்ளது.

இதுவரை கொரோனாத் தொற்று உறுதியாகியோ ரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 191ஆக காணப்படுகின்றது. அதில் 4 ஆயிரத்து 814 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 458 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். (எ)

# இலங்கையரை அழைத்துவர ஐந்து விமானங்கள் சேவை!

கொழும்பு, நவ.14

கொரோனா நோய்த் தொற்று நிலைமை காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை ஐந்து விமானங்கள் மூலம் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நவம்பர் 18 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 290 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என்றும், நவம்பர் 20 ஆம் திகதி இத்தாலியிலிருந்து 100 இலங்கையர்கள் திருப்பி அழைத்து வரப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

297 இலங்கையர்கள் நவம்பர் 21 ஆம் திகதி கட்டாரிலிருந்து அழைத்துவரப்படவுள்ளனர். மேலும் 297 இலங்கையர்கள் நவம்பர் 23 ஆம் திகதி குவைத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

நவம்பர் 26 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானில் இருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் வெளிநாட்டு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் விசேட அனுமதியின் அடிப்படையில் டுபாயில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஐந்து விமானங்கள் மூலம் வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படு கின்றது. (எ-இ)

# நுழைவு அனுமதிக்காக நிதி கோருவோரிடம் அவதானம்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

இலங்கை அல்லது வேறு நாடுகளுக்கான நுழைவு அனுமதிக்கு நிதிக் கொடுப்பனவைக் கோரும் தனிநபர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இனிவரும் காலங்களில் உள்நுழையும் மற்றும் வெளிச்செல்லும் அனைத்து இலங்கைப் பயணிக ளையும், இலங்கை வெளிநாட்டு அமைச்சு இது தொடர்பில் எச்சரிக்கையாக செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்குள் நுழைவதற்கோ அல்லது வெளிச் செல்வதற்கோ உரிய அங்கீகாரத்தை சம்பந்தப் பட்ட அரச நிறுவனங்கள் தவிர எந்தவொரு தனிநபருக்கும் இலங்கை அரசாங்கம் வழங்க வில்லை என்று வெளிவிவகார அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

இது தொடர்பான உண்மையான தகவல்களை https://www.contactsrilanka.mfa.gov.lk என்ற இணைய தள முகவரிக்குச் சென்று பெற்றுக் கொள்ளமுடி யும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் உங்கள் அருகி லுள்ள இலங்கைத் தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தை தொடர்பு கொண்டு இது தொடர் பில் மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளது. (ற-இ)